தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement – 21B - ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.

All the Best!!!

**1)** பொருத்துக:

(i) பிரிட்டன் - 1. நெறிமுறை கோட்பாடுகள்

(ii) அயர்லாந்து - 2. மாநிலங்களவை உறுப்பினர் தேர்வு

(iii) அமெரிக்கா - 3. ஒற்றைக் குடியுரிமை

(iv) பிரான்ஸ் - 4. குடியரசுத்தலைவர் பதவிநீக்க தீர்மானம்

(v) தென் ஆப்பிரிக்கா - 5. குடியரசு

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 5 | 2 |
| B) | 2 | 1 | 4 | 5 | 3 |
| C) | 4 | 1 | 3 | 5 | 2 |
| D) | 3 | 1 | 4 | 2 | 5 |

**2)** இந்திய அரசமைப்பின்படி, மாநில அரசாங்கத்தின் தலைவராக இருப்பவர் யார்?

A) ஆளுநர் B) அமைச்சரவைக் குழு

C) குடியரசுத்தலைவர் D) மேற்கண்ட எவருமில்லை

**3)** தவறாக கொடுக்கப்பட்டுள்ளது எது?

A) பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்

B) பிரிவு 15 - பாகுபாடை தடைசெய்தல்

C) பிரிவு 16 - பொதுவேலைவாய்ப்புகளில் சமவாய்ப்பளித்தல்

D) பிரிவு 17 - இராணுவ & கல்விசார் பட்டங்களைத்தவிர மற்றவற்றை நீக்குதல்

**4)** இந்தியக் காவல் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் ஐந்து மாத அடிப்படைப்பயிற்சி பெற்றபின்னர், ______ தேசிய காவல் பயிற்சி நிலையத்தில் சிறப்புப் பயிற்சி பெறுகின்றனர்.

A) ஜெவகர்லால் நேரு B) சர்தார் பட்டேல்

C) பகத்சிங் D) சுபாஷ் சந்திர போஸ்

**5)** மாநில கண்காணிப்பு ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1954 B) 1958 C) 1962 D) 1964

**6)** தமிழகத்தில் சட்ட மேலவை கலைக்கப்பட்ட நாள் எது?

A) நவம்பர் 14, 1984 B) நவம்பர் 21, 1985 C) நவம்பர் 1, 1986 D) நவம்பர் 30, 1983

**7)** கீழ்காணும் பணிகள் எதனுடையது?

1. அமைச்சர்களின் கொள்கையாக்கம் மற்றும் நாடாளுமன்றச் செயல்பாடுகளில் உதவி புரிதல்

2. சட்டங்கள் வரைதல், விதிகள் மற்றும் கொள்கைகளின் செயல்முறைகள்

3. திட்டமிடல், திட்ட உருவாக்கம்

4. அமைச்சகத்தின் செலவினங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை சார்ந்த பணிகள்

A) பிரதமர் அலுவலகம் B) ராஷ்டிரபதி பவன்

C) மத்திய தலைமைச் செயலகம் D) நாடாளுமன்றம்

ETW ACADEMY

8) பேச்சுரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை, ஆயுதமின்றி கூடும் உரிமை ஆகியவை அரசியலமைப்பின் பகுதி III ல் எப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ளன?

A) பிரிவு 19 B) பிரிவு 20 C) பிரிவு 21 D) பிரிவு 22

9) ஒரு மாநிலத்தின் பெயரையோ, நிலப்பரப்பையோ மாற்றுகிறோம் என மாநிலத்திற்கு தகவலை அனுப்புபவர் யார்?

A) பிரதமர் B) மாநிலங்களவையின் தலைவர்

C) குடியரசுத்தலைவர் D) மத்திய தலைமைச் செயலாளர்

10) ஒவ்வொரு தனிநபரின், தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நீதிப்பேராணை எது?

A) ஆட்கொணர்வு நீதிப்பேராணை B) நெறியுறுத்தும் நீதிப்பேராணை

C) தடை நீதிப்பேராணை D) இவையனைத்தும்

11) குடியரசுத்தலைவருக்கு பதவிப்பிரமாணம் செய்துவைப்பவர் யார்?

A) பிரதமர் B) மக்களவை சபாநாயகர்

C) மாநிலங்களவைத் தலைவர் D) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி

12) நிலைக்குழுக்கள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிதாக உருவாக்கப்படும்?

A) ஒவ்வொரு ஆண்டும் B) இரண்டாண்டுக்கு ஒருமுறை

C) மூன்றாண்டுக்கு ஒருமுறை D) ஐந்தாண்டுக்கு ஒருமுறை

13) தனது முதல் பரிந்துரையாக மாவட்ட பஞ்சாயத்து நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாக இருக்க வேண்டும் என்ற குழு எது?

A) பல்வந்த்ராய் மேத்தா குழு B) அசோக் மேத்தா குழு

C) சி.எச். அனுமந்த்ராவ் குழு D) ஜி.வி.கே. ராவ் குழு

14) பின்வருவனவற்றுள் ஈரவை சட்டமன்றத்தை கொண்டிருக்காத மாநிலம் எது?

A) பீகார் B) கர்நாடகா C) தெலுங்கானா D) ஜார்கண்ட்

15) ஈரவைகளிலும் நிறைவேற்றப்பட்ட ஒரு முன்வரைவை மறுபரிசீலனைக்காக குடியரசுத்தலைவர் எத்தனை முறை திருப்பி அனுப்பலாம்?

A) ஒரு முறை B) இரண்டு முறை

C) மூன்று முறை D) எத்தனை முறை வேண்டுமானாலும்

16) நாடாளுமன்ற தலைமைச்செயலகத்தின் நிர்வாகத் தலைவர் யார்?

A) சபாநாயகர் B) பிரதமர்

C) குடியரசுத்தலைவர் D) துணைக் குடியரசுத்தலைவர்

17) சட்டமேலவையை உருவாக்கும் அதிகாரம் பெற்றது எது?

A) மக்களவை B) மாநிலங்களவை

C) ஆளுநர் D) முதலமைச்சர்

ETW ACADEMY

18) நிரந்தர அவையான சட்ட மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் என்ன?

A) 3 ஆண்டுகள் B) 5 ஆண்டுகள் C) 6 ஆண்டுகள் D) சாகும் வரை

19) சட்டமன்றம் அமர்வில் இல்லாத காலங்களில் ஆளுநர் அவசர சட்டங்களை பிறப்பிக்கலாம் என அதிகாரமளிக்கும் அரசமைப்பின் உறுப்பு எது?

A) 168 B) 169 C) 213 D) 167

20) சுதேசஅரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைக்கும் பணி எப்போது முடிவடைந்தது?

A) 30, ஏப்ரல் 1947 B) 15, ஆகஸ்ட் 1947

C) 26, ஜனவரி 1950 D) 30, ஜனவரி 1949

21) ஒரிசா மாகாணத்திலிருந்து பீகார் பிரிக்கப்பட்டு, ஒடிசா மாநிலம் அமைக்கப்பட்ட ஆண்டு என்ன?

A) 1936 B) 1947 C) 1949 D) 1952

22) பம்பாய் மறுசீரமைப்புச் சட்டம் 1960 இன் படி உருவாக்கப்பட்ட மாநிலம் எது?

A) பஞ்சாப் B) மகாராஷ்டிரம் C) குஜராத் D) டெல்லி

23) பொருந்தாதது எது?

A) பல்வந்த்ராய் மேத்தா குழு - 1961 B) அசோக் மேத்தா குழு - 1977 - 78

C) ஜி.வி.கே. ராவ் குழு - 1985 D) எல்.எம்.சிங்வி குழு - 1986

24) ஒரு உறுப்பினர், தனி நபர் மசோதாவை அறிமுகப்படுத்த வேண்டுமெனில், அதை மக்களவை சபாநாயகருக்கோ அல்லது மாநிலங்களவை தலைவருக்கோ எப்போதே தெரிவிக்கவேண்டும்?

A) ஆறுமாதம் முன்பு B) ஒரு மாதம் முன்பு

C) 10 நாட்கள் முன்பு D) 15 நாட்கள் முன்பு

25) மாநிலங்களுக்கிடையேயான நதி நீர்ப் பிரச்சனைகள் தீர்ப்பதற்கு வழிமுறையை வழங்கும் அரசமைப்பு உறுப்பு எது?

A) 168 B) 234 C) 262 D) 297

26) 73-வது சட்ட திருத்தமும் 74-வது சட்ட திருத்தமும் இந்திய அரசமைப்பில் எந்தெந்த பகுதிகளை இணைத்தது?

A) X மற்றும் XI (A) B) X மற்றும் X (A)

C) IX மற்றும் X (A) D) IX மற்றும் IX (A)

27) இந்திய அரசியலமைப்பின் முகப்புரை தெளிவுபடுத்தும் கூறுகளின் சரியான வரிசை எது?

A) இறையாண்மையுடைய, சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சி, குடியரசு

B) இறையாண்மையுடைய, மதசார்பற்ற, சமதர்ம, மக்களாட்சி, குடியரசு

C) இறையாண்மையுடைய, குடியரசு, சமதர்ம, மதசார்பற்ற, மக்களாட்சி

D) இறையாண்மையுடைய, சமதர்ம, மதசார்பற்ற, குடியரசு, மக்களாட்சி

28) அரசியலமைப்பின் எந்த சட்டத்திருத்தம் 'சிறிய அரசியலமைப்பு' என அறியப்படுகிறது

A) 42 B) 44 C) 86 D) 88

ETW ACADEMY

**29)** கிராம சபை கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவர் யார்?

A) மாவட்ட ஆட்சியர்
B) கிராம நிர்வாக அலுவலர்
C) ஊராட்சி மன்றத் தலைவர்
D) மாவட்ட நிதி ஆணையர்

**30)** சுதந்திரத்திற்குப் பிறகு, "இந்தியாவில் பரவலாக்கப்பட்ட அதிகார அமைப்பு இருத்தல் வேண்டும், கிராமபுற பஞ்சாயத்துக்கு ஆளுகையில் பொறுப்புகள் அளிக்கப்பட வேண்டும்" என்று வலியுறுத்தியவர் யார்?

A) ஜெவகர்லால் நேரு
B) மவுண்ட்பேட்டன் பிரபு
C) லாலா லஜபதிராய்
D) மகாத்மா காந்தியடிகள்

**31)** 1952, சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம் என்ன?

A) மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களில் தன்னிறைவு பொருளாதாரத்தை எட்டுதல்
B) மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராம விவசாயிகளிடம் அதிகாரத்தை வழங்குதல்
C) மக்களின் கூட்டு முயற்சியின் மூலம் கிராமங்களின் சமூக பொருளாதார மாற்றத்தை உறுதி செய்வது
D) மேற்கண்ட அனைத்தும்

**32)** 73வது சட்டத்திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட 11 வது அட்டவணை தருவது எதை?

A) கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் முதலடுக்கிற்கு தருகிறது
B) கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் இரண்டாம் அடுக்கிற்கு தருகிறது.
C) கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் இரண்டாம் அடுக்கிற்கு தருகிறது.
D) கட்டாய பணிகள் மற்றும் விருப்ப பணிகளை பஞ்சாயத்தின் மூன்றடுக்குகளுக்கும் தருகிறது.

**33)** பின்வரும் எச்சூழ்நிலையில், தேசிய அவசரநிலையை, சட்டப்பிரிவு 352 இன்படி, குடியரசுத்தலைவர் அறிவிப்பதில்லை?

A) போர், வெளிநாட்டினர் ஆக்கிரமிப்பு
B) ஆயுதமேந்திய கிளர்ச்சி அல்லது உடனடி ஆபத்து
C) இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது
D) ஆளுங்கட்சியின் மீதான அதீத ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்போது

**34)** உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு அளிக்க வகைசெய்யும் அரசியலமைப்பு உறுப்பு எது?

A) 133
B) 32
C) 226
D) 43

**35)** ஒரு வார்டு குழுவின் தலைவரின் பதவிக்காலம் என்ன?

A) 5 ஆண்டுகள்
B) 3 ஆண்டுகள்
C) 2 1/2 ஆண்டுகள்
D) 1 ஆண்டு

**36)** மொழி அடிப்படையில் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்ட முதல் மாநிலம் எது?

A) பீஹார்
B) ஒடிசா
C) தமிழ்நாடு
D) ஜார்கண்ட்

**37)** மாநிலத்தின் அரசு வழக்கறிஞரை பதவிநீக்கம் செய்யும் அதிகாரம் பெற்றவர் யார்?

A) குடியரசுத்தலைவர்
B) ஆளுநர்
C) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி
D) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

ETW ACADEMY

**38)** ஆளுநர், மாநிலச் சட்டமன்றத்தின் ஒரு பகுதி எனக் கூறும் அரசமைப்பின் உறுப்பு எது?

A) 165 B) 166 C) 167 D) 168

**39)** முதலமைச்சர் உட்பட மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எத்தனை விழுக்காட்டை தாண்டக்கூடாது என சட்டப்பிரிவு 164 (1A) கூறுகிறது?

A) 18 B) 15 C) 14 D) 21

**40)** எந்த அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலமாக இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயது 21லிருந்து 18 ஆக குறைக்கப்பட்டது?

A) 9வது சட்டத்திருத்தம், 1960 B) 61வது சட்டத்திருத்தம், 1988

C) 69வது சட்டத்திருத்தம், 1991 D) 72வது சட்டத்திருத்தம், 1992

**41)** இந்திய தர நிர்ணய பணியகம் நிறுவப்பட்ட ஆண்டு என்ன?

A) 1956 B) 1976 C) 1996 D) 1986

**42)** 1977 ஆம் ஆண்டு வரை பிரதமரின் செயலகம் என்று அழைக்கப்பட்டுவந்தது, யாருடைய காலத்தில் பிரதமர் அலுவலகம் என்று மாற்றப்பட்டது?

A) சந்திரசேகர் B) வி.பி.சிங்

C) மொராஜி தேசாய் D) இந்திரா காந்தி

**43)** இந்தியாவில் அரசு பணியாளர் தேர்வாணையம் உருவாவதற்கான வித்து எப்போது நடப்பட்டது?

A) 1909 ஆகஸ்ட் 8 B) 1919 மார்ச் 5

C) 1935 செபடம்பர் 12 D) 1947 ஆகஸ்ட் 8

**44)** குடியரசுத்தலைவரால் எவ்வளவு காலத்துக்கு மிகாத அவசரச் சட்டத்தை அறிவிக்க முடியும்?

A) 3 மாதகாலத்துக்கு B) 6 மாதகாலத்துக்கு

C) 8 மாதகாலத்துக்கு D) 10 மாதகாலத்துக்கு

**45)** 1969இல் குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகள் ஒரே சமயத்தில் காலியாக இருந்தபோது, குடியரசுத்தலைவராக நியமிக்கப்பட்ட இந்திய தலைமை நீதிபதி யார்?

A) எம். ஹிதயத்துல்லா B) எம். ஜெவாகிருல்லா

C) எம். அப்துல்லா D) எம். ரஹமத்துல்லா

**46)** ஆளுநர்

A) ஐந்தாண்டு காலம் பதவியிலமர்த்தப்படுவார்

B) குடியரசுத்தலைவர் விரும்பும் காலம் வரை பதவியிலிருப்பார்

C) அவரைத் தொடர்ந்து வேறொருவர் பதவியில் அமர்த்தப்படும்வரை பதவியில் இருப்பார்.

D) A அல்லது B அல்லது C

**47)** உயர்நீதிமன்றத்தின் நீதிப்புனராய்வு அதிகாரம் பற்றி வெளிப்படையாக கூறும் சட்டப்பிரிவுகள் யாவை?

A) 225 & 226 B) 226 & 227 C) 227 & 228 D) 228 & 229

ETW ACADEMY

**48)** மாநிலங்களவையின் அலுவல் வழி அவைத்தலைவராக இருப்பவர் யார்?

A) குடியரசுத்தலைவர் B) துணைக் குடியரசுத்தலைவர்

C) மக்களவை துணை சபாநாயகர் D) துணைப் பிரதமர்

**49)** ஒரு திருத்தசட்டத்தை முன்மொழிவதற்கு யாருடைய அனுமதி பெறப்படவேண்டும்?

A) பிரதமர் B) குடியரசுத்தலைவர்

C) சபாநாயகர் D) அவை முன்னவர்

**50)** இந்திய நாடாளுமன்றத்தில் மாநிலங்களவை எப்போது உருவாக்கப்பட்டது?

A) 1952 ஏப்ரல் 3 B) 1950 மே 13 C) 1952 மே 13 D) 1950 ஏப்ரல் 3

**51)** நிதிநிலை அறிக்கை அல்லது பணம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு சட்டத்தையும் மக்களவை நிறைவேற்றினால், அதை மாநிலங்களவை ______

A) நிராகரிக்க முடியும்

B) நிராகரிக்க முடியாது

C) 24 நாட்களுக்கு மட்டும் காலதாமதப் படுத்தலாம்

D) மாற்றம் செய்வதற்கு ஆலோசனை கூறமுடியாது

**52)** ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் ஒரு பதிவுறு நீதிமன்றமாகும் எனக் குறிப்பிடும் அரசமைப்பு விதி எது?

A) 215 B) 217 C) 222 D) 230

**53)** பின்வரும் எவ்வதிகாரத்தை உயர்நீதிமன்றம் பெற்றிருக்கிறது?

A) கீழ் நீதிமன்றங்களில் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை திரும்ப பெறும் அதிகாரம்.

B) பொதுச் சட்டங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட படிவங்கள் மூலம் பயிற்சி மற்றும் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்த ஓர் ஆணையை வெளியிடச் செய்தல்

C) பரிந்துரைக்கப்பட்ட முறைகளில் கீழ் நீதிமன்றங்கள் புத்தகங்கள், பதவிகள், கணக்குகளைப் பராமரித்தல்.

D) இவையனைத்தும்

**54)** அரசமைப்பு விதி 352இன் படி தேசிய நெருக்கடி நிலை அமலில் உள்ளபோது சட்டசபையின் பதவிக்காலம் எவ்வளவு காலம் வரை நீட்டிக்கப்படலாம்?

A) 3 மாதங்கள் B) 6 மாதங்கள் C) 1 வருடம் D) 5 வருடங்கள்

**55)** மத்திய அரசு - உயர்மட்ட நிர்வாகத்தில் 3 - ஆம் நிலையில் உள்ள நிர்வாக அமைப்பு எது?

A) ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம்

B) தேசிய மனித உரிமைகள் ஆணையம்

C) இந்தியத் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் (சி.ஏ.ஜி)

D) இந்தியத் தேர்தல் ஆணையம்

**56)** மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிப்பவர் யார்?

A) முதலமைச்சர் B) குடியரசுத்தலைவர்

C) ஆளுநர் D) மாநிலங்களின் அலுவல் வழித்தலைவர்

ETW ACADEMY

**57)** ”மிக முக்கியத்துவம் கொண்ட அலுவலர் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர்” என கூறியவர் யார்?

A) ஜெவகர்லால் நேரு
B) சர்தார் வல்லபாய் பட்டேல்
C) பி.ஆர்.அம்பேத்கர்
D) மொராஜி தேசாய்

**58)** இந்தியாவின் மாற்றத்திற்கான தேசிய குழு என்பது பின்வரும் எதன் பொருள் ஆகும்?

A) நிதி ஆயோக்
B) திட்ட கமிஷன்
C) நிதிக் குழு
D) மண்டலக் குழு

**59)** பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

1. பண மசோதாவை, சட்டமேலவை திருத்தவோ, நிராகரிக்கவோ முடியாது. மேலும் 14 நாட்களுக்குள் பரிந்துரைகளை அளித்தோ அல்லது பரிந்துரைகள் இல்லாமலோ அதை பேரவைக்கு திருப்பி அனுப்ப வேண்டும்.
2. பணமசோதாவின் மீதான மேலவையின் பரிந்துரையை ஏற்பதோ அல்லது ஏற்காகதோ சட்டப்பேரவையின் தனிப்பட்ட அதிகாரமாகும்

A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

**60)** சட்டமேலவையின் அதிகாரம் பற்றியக் கூற்றுகளை ஆராய்க:

1. குடியரசுத் தேர்தலில் பங்குபெறுகிறது
2. அரசமைப்புத் திருத்த மசோதாக்களில் பங்கேற்கிறது

A) 1 மட்டும் சரி
B) 2 மட்டும் சரி
C) இரண்டும் சரி
D) இரண்டும் தவறு

**61)** ஆளுநரைப் பற்றிய பின்வரும் கூற்றுகளை ஆராய்க.

1. மாநில நிர்வாகத்தின் ஆட்சிப்பொறுப்பு ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. மாநிலத்தின் அனைத்து ஆட்சி நடிவடிக்கைகளும் அவரது பெயரால் நடைபெறுகின்றன.
3. மாநிலத்தின் உண்மையான செயல் அதிகாரங்கள் ஆளுநரிடமே உள்ளன.

A) 1 & 2 சரி
B) 2 & 3 சரி
C) 1 & 3 சரி
D) அனைத்தும் சரி

**62)** அமைச்சரவையின் சார்பாக இறுதி முடிவுகளை, கொள்கை முடிவுகளை எடுப்பது?

A) சட்டமன்றம்
B) ஆளுநர்
C) முதலமைச்சர்
D) அமைச்சரவை குழு

**63)** ஊராட்சி ஒன்றிய தலைவராக (Chairman) தேர்ந்தெடுக்கப்படுபவர் யார்?

A) ஏதேனும் ஒரு கிராம நிர்வாக அலுவலர்
B) ஏதேனும் ஒரு ஊராட்சியின் தலைவர்
C) ஏதேனும் ஒரு ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்
D) ஏதேனும் ஒரு நகரசபை உறுப்பினர்

ETW ACADEMY

**64)** மூன்றடுக்கு பஞ்சாயத்து அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என 73-வது அரசமைப்பு சட்ட திருத்தத்தின் மூலம் சேர்க்கப்பட்ட எந்த பிரிவு கூறுகிறது?

A) 143 C B) 243 B C) 288 D D) 234 A

**65)** கொலிஜியம் என்பது?

A) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி & 8 மூத்த நீதிபதிகளின் குழு

B) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி & 4 மூத்த நீதிபதிகளின் குழு

C) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி & 6 மூத்த நீதிபதிகளின் குழு

D) உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி & 2 மூத்த நீதிபதிகளின் குழு

**66)** நாடு முழுவதும் ஒரே மாதிரியான விதிகளை அமல்படுத்துவது சரியல்ல என்று கூறும் அரசமைப்பு உறுப்பு எது?

A) 11(2) B) 12(3) C) 13(2) D) 14(3)

**67)** உச்ச நீதிமன்றத்தால் அடிக்கடி எடுத்தாளப்படும் அரசமைப்பு உறுப்பு எது?

A) 11 B) 21 C) 31 D) 41

**68)** இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கை துறை தலைவர் எத்தனை ஆண்டுகளுக்கு அல்லது எத்தனை வயது வரை நியமனம் செய்யப்படுகிறார்?

A) 5 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை B) 5 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

C) 6 ஆண்டுகள் அல்லது 62 வயது வரை D) 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை

**69)** மத்தியபுலனாய்வுத் துறையானது, எந்தக் கமிட்டியின் பரிந்துறையின் மூலம் உருவாக்கப்பட்டது?

A) எஸ். வேணுகோபால் கமிட்டி B) நீதிபதி ராஜன் கமிட்டி

C) சந்தாணம் கமிட்டி D) சிங்வி கமிட்டி

**70)** தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பரிந்துரை செய்த குழு எது?

A) சந்தாணம் குழு B) மொராஜி தேசாய் குழு

C) வீரப்ப மொய்லி குழு D) சர்க்காரியா குழு

**71)** நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் இந்தியாவில் நடைமுறைக்கு வந்தது எப்போது?

A) டிசம்பர் 24, 1986 B) நவம்பர் 13, 1986

C) ஜனவரி 1, 1987 D) பிப்ரவரி 10, 1987

**72)** கூட்டாட்சி முறைக்கு எத்தன்மையிலான அரசமைப்பு இன்றியமையாததாகும்?

A) எழுதப்பட்ட B) பெற்றுக்கொள்ளப்பட்ட

C) மாற்றியமைக்கப்பட்ட D) தருவிக்கப்பட்ட

**73)** கிராம ஊராட்சியின் ஆய்வாளராக செயல்படுபவர் யார்?

A) வட்டாச்சியர் B) நிதி ஆணையர்

C) மாவட்ட ஆட்சியர் D) கிராம நிர்வாக அலுவலர்

ETW ACADEMY

**74)** மாநிலங்களுக்கு சுயாட்சியை வழங்கிய சட்டம் எது?

A) ஒழுங்குமுறைச் சட்டம் 1773
B) இந்திய அரசுச் சட்டம் 1909
C) இந்திய அரசுச் சட்டம் 1919
D) இந்திய அரசுச் சட்டம் 1935

**75)** பண்டித ஜவஹர்லால் நேரு ராஜஸ்தான் மாநிலம் நகவுரில் பஞ்சாயத்து ராஜ்-க்கான அடிக்கல்லை நாட்டிய நாள் எது?

A) அக்டோபர் 2, 1956
B) ஆகஸ்ட் 15, 1959
C) ஆகஸ்ட் 15, 1956
D) அக்டோபர் 2, 1959

**76)** மாவட்ட ஊராட்சியின் மக்கள் தொகை வரம்பு என்ன?

A) 25000
B) 30000
C) 100000
D) 50000

**77)** பேரூராட்சியின் நிர்வாகத்தினை மேற்கொள்ள நியமிக்கப்படுபவர் யார்?

A) நிர்வாக அதிகாரி
B) பேரூராட்சி ஆணையர்
C) செயல் அலுவலர்
D) வளர்ச்சி அலுவலர்

**78)** அடிப்படை உரிமைகள் நிறுத்திவைத்தல் பற்றிய கூற்றுகளில் தவறானது எது?

A) குடியரசுத் தலைவர் சில குறிப்பிட்ட ஆணைகளை பிறப்பிப்பதன் மூலம் அடிப்படை உரிமைகளை நிறுத்திவைக்க முடியும்.

B) குடியரசுத் தலைவரின் இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட தேவையில்லை

C) ஆனால், எந்த சூழ்நிலையிலும் சட்டப்பிரிவு 20 மற்றும் 21 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமைகளை தடை செய்யமுடியாது.

D) தவறானது எதுவுமில்லை

**79)** அரசியலமைப்பின் எத்தனையாவது சட்டப்பிரிவு மூன்று வகைகளில் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்களைச் செய்ய வழிவகுக்கிறது?

A) 268வது
B) 286வது
C) 386வது
D) 368வது

**80)** மக்கள் முன்னிலையில், மக்கள் மொழியிலேயே பிரச்சனையை விசாரித்து, விரைவான நீதியை வழங்க அமைக்கப்பட்ட நீதிமன்றம் எது?

A) இ - நீதிமன்றங்கள்
B) விரைவு நீதிமன்றங்கள்
C) லோக் அதாலத் - மக்கள் நீதிமன்றங்கள்
D) நடமாடும் நீதிமன்றங்கள்

**81)** ஓர் கட்சி அல்லது வேட்பாளர், தேர்தல் சட்டங்களை மீறி வெற்றிபெறுகிறார் எனில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டபோதிலும், அத்தேர்தலை நிராகரித்து உத்தரவிடும் அதிகாரம் கொண்ட அமைப்பு எது?

A) தேர்தல் ஆணையம்

B) நீதிமன்றம்

C) பாராளுமன்றம்

D) மாநில சட்டமன்றம்

**82)** அரசமைப்பின் 249 வது உறுப்பின் படி, ஒரு அதிகாரத்தை மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு நாடாளுமன்றத்தின் எந்த அவையால் மாற்றமுடியும்?

A) மக்களவை B) மாநிலங்களவை C) A அல்லது B D) A மற்றும் B

**83)** எல்லா மண்டலக் குழுக்களின் பொதுத் தலைவராக உள்ளவர் யார்?

A) பிரதமர் B) உள்துறை அமைச்சர்

C) நிதியமைச்சர் D) குடியரசுத்தலைவர்

**84)** மாநில ஆளுநர்கள் கூட்டாட்சி முறைக்கு எதிராக இருப்பதாக விமர்சித்த குழு எது?

A) புன்ச்சி குழு B) ராஜமன்னார் குழு

C) சர்க்காரியா குழு D) வெங்கட செல்லய்யா குழு

**85)** பொதுவான உயர்நீதிமன்றத்தைக் கொண்டுள்ள மாநிலங்களில் சேராதது எது?

A) பஞ்சாப் B) ஹரியானா C) சண்டிகர் D) பீகார்

**86)** ஒரு ஆண்டில், கிராம சபைக் கூட்டங்கள் எத்தனைமுறை நடைபெறும்?

A) 2 B) 3 C) 4 D) 6

**87)** புதிய அனைத்து இந்தியப் பணிகளை உருவாக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்தின் எந்த அவைக்கு வழங்கப்பட்டுள்ளது?

A) மக்களவை B) மாநிலங்களவை

C) ஈரவைகளுக்கும் D) ஏதேனும் ஒரு அவை

**88)** 1 கோடி ரூபாய்க்கும் குறைவான மதிப்புமிக்க நுகர்வோர் குறைகளை தீர்க்கும் அமைப்பு எது?

A) நுகர்வோர் மேலாண்மை ஆணையம் B) மாநிலக் குழு நுகர்வோர் ஆணையம்

C) மண்டல நுகர்வோர் குறைதீர் ஆணையம் D) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம்

**89)** தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி தகவலைப் பெற, ஒருவர் விண்ணப்பக் கட்டணமாக செலுத்தவேண்டிய தொகை எவ்வளவு?

A) 1000 ரூ B) 500 ரூ C) 100 ரூ D) 10 ரூ

**90)** இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள்

1. எந்த நேரத்திலும் எந்த அரசுப் பணிக்கும் மாற்றப்படலாம்.
2. இந்த அலுவலர்கள் அனைத்திந்திய அளவில் நியமிக்கப்படுகிறார்கள்.
3. பொது தகுதியை பெற்றிருந்தாலும் வெவ்வேறு ஊதிய விகிதத்தை கொண்டிருப்பார்கள்

A) 1 மட்டும் தவறு B) 2 மட்டும் தவறு C) 3 மட்டும் தவறு D) அனைத்தும் சரி

**91)** விடுதலைக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அனைத்திந்தியப் பணி எது?

A) இந்திய ஆட்சிப்பணி

B) இந்திய காவல் பணி

C) இந்திய வனப் பணி

D) இவையனைத்தும்

**92)** நிழல் அமைச்சரவை என்ற வழக்கத்தை கொண்டிருக்கும் நாடு எது?

A) அமெரிக்கா B) கனடா C) ரஷ்யா D) இங்கிலாந்து

**93)** மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிக்காலம் என்ன?

A) 4 ஆண்டுகள் B) 5 ஆண்டுகள் C) 6 ஆண்டுகள் D) 8 ஆண்டுகள்

**94)** மக்கள் முன்னிலையில், மக்கள் மொழியிலேயே பிரச்சனையை விசாரித்து, விரைவான நீதியை வழங்க அமைக்கப்பட்ட நீதிமன்றம் எது?

A) இ - நீதிமன்றங்கள் B) விரைவு நீதிமன்றங்கள்

C) லோக் அதாலத் - மக்கள் நீதிமன்றங்கள் D) நடமாடும் நீதிமன்றங்கள்

**95)** மொராஜி தேசாயிக்குப் பிறகு, முதல் நிர்வாகச் சீர்திருத்தக்குழுவின் தலைவராக இருந்தவர் யார்?

A) கே. அனுமந்தையா B) பி. சந்திர ரெட்டி

C) ஏ. இலட்சுமன சுவாமி D) பி.வி. ராஜமன்னார்

**96)** இந்து சட்டங்களைத் தொகுப்பதற்கு காரணமானவர் யார்?

A) காரன் வாலிஸ் B) வாரன் ஹேஸ்டிங்ஸ் C) வெல்லெஸ்லி D) டல்ஹௌசி

**97)** ஒருவேளை, உள்ளாட்சி அமைப்புகள் தேர்தலுக்கு முன்பே கலைக்கப்பட்டால், கலைக்கப்பட்ட எத்தனை மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும்?

A) 3 B) 4 C) 5 D) 6

**98)** மாநிலங்களில் உள்ளாட்சி அமைப்புகளான பஞ்சாயத்துகள், நகராட்சிகளுக்கான தேர்தல்களை நடத்துவது எது?

A) இந்திய தேர்தல் ஆணையம் B) இந்திய தேர்தல் அதிகாரி

C) மாநிலத் தேர்தல் ஆணையம் D) ஏதுமில்லை

**99)** சட்டமியற்றும் பட்டியல்களில் குறிப்பிடப்படாத எஞ்சியுள்ள அதிகாரங்கள் யாரிடம் உள்ளது?

A) குடியரசுத்தலைவர் B) மாநில அரசு C) மத்திய அரசு D) ஏதுமில்லை

**100)** ஒவ்வொரு சட்டவரைவும் கடக்கவேண்டிய நிலைகளின் சரியான வரிசை எது?

A) முதல் வாசிப்பு, அறிக்கைநிலை, இரண்டாம் வாசிப்பு, குழுநிலை, மூன்றாவது வாசிப்பு

B) முதல் வாசிப்பு, குழுநிலை, இரண்டாம் வாசிப்பு, அறிக்கைநிலை, மூன்றாவது வாசிப்பு

C) முதல் வாசிப்பு, இரண்டாம் வாசிப்பு, குழுநிலை, அறிக்கைநிலை, மூன்றாவது வாசிப்பு

D) முதல் வாசிப்பு, இரண்டாம் வாசிப்பு, குழுநிலை, மூன்றாவது வாசிப்பு, அறிக்கைநிலை

**101)** ஒரு மசோதாவை நிதி மசோதா என்று சான்றளிக்கும் சிறப்பு அதிகாரத்தை சபாநாயகருக்கு வழங்கியிருப்பது (அ) வழங்கியிருப்பவர்?

A) பிரதமர்

B) குடியரசுத்தலைவர்

C) நாடாளுமன்றம்

D) அரசியலமைப்பு

**102)** கண்டவைகளில் தவறானது எது?

(i) நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றி விசாரணை நடத்துவதற்கு நீதி மன்றத்திற்கு எந்த தடையும் இல்லை

(ii) ஈரவைகளில் எந்த ஒரு அவை நடவடிக்கைகளின் உண்மையான எந்த ஒரு அறிக்கையையும் செய்தித்தாள்களில் பிரசுரிக்கும் உரிமை நாடாளுமன்ற உறுப்பினருக்கு உண்டு

(iii) பிரசுரம் தவறான நோக்கோடு பிரசுரிக்கப்பட்டதாக இருந்தாலொழிய, அதற்கெதிரான நீதிமன்ற சட்ட நடவடிக்கைகளுக்கு எதிரான பாதுகாப்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

A) i மட்டும் B) ii மட்டும் C) iii மட்டும் D) அனைத்தும்

**103)** 1963இல் மேற்கொள்ளப்பட்ட எத்தனையாவது சட்டத்திருத்தத்தின்படி உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 60 லிருந்து 62 ஆக மாற்றப்பட்டது?

A) 8 B) 12 C) 15 D) 18

**104)** அண்ணல் அம்பேத்கர் அரசமைப்பின் எந்த உறுப்பை “தேவையற்ற வார்த்தை” என்று வர்ணித்தார்?

A) 354 B) 32 C) 356 D) 36

**105)** நியூசிலாந்தில் OMBUSDSMAN அமைப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) ஒருங்கிணைந்த விசாரணை அதிகாரி
B) ஒருங்கிணைந்த விசாரணைகள் ஆணையம்
C) பாராளுமன்ற விசாரணை கமிஷனர்
D) தேசிய விசாரணைகள் ஆணையர்

**106)** லோக்பால் நடைமுறைக்கு வந்த நாள் எது?

A) ஜனவரி 16, 2014
B) டிசம்பர் 18, 2013
C) ஜனவரி 1, 2014
D) டிசம்பர் 17, 2013

**107)** சட்டப்பேரவை மற்றும் சட்டமேலவையை "கப் அண்ட் சாசர்" என்று அழைத்தவர் யார்?

A) குஷ்வந்த் சிங்
B) அண்ணல் அம்பேத்கர்
C) அறிஞர் அண்ணா
D) ஜெயப்பிரகாஷ் நாராயணன்

**108)** பின்வரும் பணிகளைச் செய்பவர் யார்?

1. ஒரு மசோதா பண மசோதாவா என முடிவு செய்தல்
2. கட்சித் தாவல் சட்டத்தின்படி உறுப்பினர்களின் தகுதியை தீர்மானித்தல்

A) முதலமைச்சர்
B) சட்டமன்ற அரசுச் செயலாளர்
C) சபாநாயகர்
D) சட்டப்பேரவை துணைத் தலைவர்

**109)** பண மசோதாவை சட்டமன்றத்தின் எந்த அவையில் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்?

A) மேலவை
B) கீழவை
C) இவையிரண்டும்
D) சட்டமன்றத்திற்கு அதிகாரமில்லை

**110)** இந்தியாவில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் எத்தனை வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன?

A) 3 B) 4 C) 7 D) 5

ETW ACADEMY

**111)** “அரசு கிராம பஞ்சாயத்துகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அவைகள் சுய ஆட்சியின் அலகுகளாக பணிபுரிய தேவையான அதிகாரங்களையும், திறனையும் வழங்க வேண்டும்” எனக் கூறும் அரசியலமைப்பின் பிரிவு எது?

A) 32 B) 48 C) 40 D) 36

**112)** பஞ்சாயத்துராஜின் முக்கிய நோக்கம் என்ன?

A) தேசத்தின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல்

B) நகரங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல்

C) இந்தியாவின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல்

D) கிராமங்களின் முழுமையான வளர்ச்சி மற்றும் மக்களின் கைகளில் அதிகாரத்தை அளித்தல்

**113)** மாநில அவசரநிலை அதிகபட்சம் எவ்வளவு காலம் நீடிக்கலாம்?

A) 2 ஆண்டுகள் B) 6 மாதங்கள் C) 3 ஆண்டுகள் D) 18 மாதங்கள்

**114)** பின்வரும் கூற்றுகளில் எது அல்லது எவை சரி?

1. 1946 டிசம்பர் 9ம் நாள், டாக்டர் சச்சிதானந்த சின்ஹா தலைமையில் அரசியல் நிர்ணயசபையின் முதல் கூட்டம் நடைபெற்றது

2. அரசியலமைப்பு வரைவுக்குழுவின் தலைவராக டாக்டர். பி.ஆர்.அம்பேத்கார் அவர்கள் 1947, ஆகஸ்ட் 29 அன்று நியமனம் செய்யப்பட்டார்

3. மகாத்மா காந்தி அவர்களின் குறிக்கோள் தீர்மானத்தின் அடிப்படையில் இந்திய அரசியலமைப்பின் முகவுரை அமைந்துள்ளது.

A) 1 & 2 B) 2 & 3 C) 1 & 3 D) அனைத்தும்

**115)** தேசிய சட்டமன்ற உறுப்பினர் தேர்விற்கும், குடியரசுத்தலைவருக்கான நேரடித் தேர்தலுக்கும் உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் வாக்கு முறை எது?

A) தொகுதி வாக்கு (BV) B) கட்சித் தொகுதி வாக்கு (PBV)

C) மாற்று வாக்கு (AV) D) இரு சுற்று முறை (TRS)

**116)** ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனி உயர்நீதிமன்றம் இருக்கவேண்டும் என்று கூறும் அரசமைப்பின் உறுப்பு எது?

A) 214 B) 225 C) 221 D) 217

**117)** குடியரசுத்தலைவரின் ஏனைய இரண்டு அலுவலகங்களில் ஒன்றான ராஷ்டிரபதி நிலையம் எங்குள்ளது?

A) ஹைதராபாத் B) பெங்களூரு

C) அமராவதி D) விசாகப்பட்டினம்

**118)** மக்களவையில் ஏதேனும் ஒரு வாக்கெடுப்பின்போது, வாக்குகள் இருபுறமும் சரிசமமாக இருக்கும் சில அரிய சந்தர்ப்பங்களில் சபாநாயகர் தனது வாக்கை செலுத்துவார். அந்த வாக்கு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) காஸ்ட்டிங் வோட் B) ஃபைனல் வோட்

C) டிட்டர்மினிங் வோட் D) முடிவு செய்யா வாக்கு

ETW ACADEMY

**119)** தற்போது இந்தியாவிலுள்ள மூன்று அனைத்திந்திய பணிகளில் சேராதது எது?

A) இந்திய ஆட்சிப் பணி (IAS)
B) இந்தியக் காவல் பணி (IPS)
C) இந்திய வனப் பணி (IFS)
D) இந்திய ஃபாரீன் பணி (IFS)

**120)** பின்வருபவர்களுள், யார் ஆளுநரால் நியமிக்கப்படுவது இல்லை?

A) மாநில வழக்குரைஞர்
B) துணை சார்பு நீதிமன்றங்களின் நீதிபதிகள்
C) மாநிலப் மாநிலப் பொதுப் பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
D) உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி

**121)** கிராம ஊராட்சி தலைவர் மற்றும் பகுதி உறுப்பினர் ஆவதர்கான குறைந்த பட்ச வயது என்ன?

A) 18
B) 25
C) 30
D) 35

**122)** கூட்டாட்சி பணியாளர் தேர்வாணையம் ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையம் என பெயர் மாற்றப்பட்டது எப்போது?

A) 1947, ஆகஸ்ட் 15
B) 1949, டிசம்பர் 29
C) 1950, ஜனவரி 26
D) 1951, அக்டோபர் 2

**123)** இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கான ஊதியம் & ஓய்வூதியம் யாரால் / எதனால் வழங்கப்படும்?

A) மத்திய அரசு
B) மாநில அரசு
C) மத்திய கருவூலம்
D) பிரதமர் அலுவலகம்

**124)** ஒரு முன்வரைவு தேர்வுக்குழுவுக்கு பரிந்துரைக்கப்பட்டால், அந்த தேர்வுக்குழுவின் உறுப்பினர்களை தெரிவுசெய்பவர் யார்?

A) முன்வரைவை சமர்பித்த உறுப்பினர்
B) சபாநாயகர்
C) சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர்
D) பிரதமர்

**125)** குடியரசுத் தலைவரையோ, துணைக்குடியரசுத் தலைவரையோ, உச்ச நீதிமன்ற அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியையோ நாடாளுமன்றம் பதவி நீக்கம் செய்யும் நடைமுறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) அவமதித்தல்
B) பழிச்சாட்டுதல்
C) கீழமைத்தல்
D) ஏதுமில்லை

**126)** குடியரசுத் துணைத்தலைவர் எதற்காக ஊதியம் பெறுகிறார்?

A) மாநிலங்களவை தலைவர் பதவிக்காக
B) குடியரசுத் துணைத்தலைவர் பதவிக்காக
C) இவையிரண்டும்
D) அவர் ஊதியம் பெறுவதில்லை

**127)** இந்திய வனப் பணி அலுவலர்கள் தங்களது அடிப்படைப் பயிற்சிகளை முடித்தவுடன், தகுதிகாண் நிலை பயிற்சிகளை எங்கு உள்ள இந்திய வனத் துறை பயிற்சி மையத்தில் மேற்கொள்ளவேண்டும்?

A) டேராடூன்
B) சிம்லா
C) மிசோரம்
D) சிக்கிம்

ETW ACADEMY

**128)** குடியுரிமை இழப்பு வழிமுறைகள் பற்றிக் கூறும் இந்திய அரசியலமைப்பின் பகுதி & சட்ட விதிகள் எவை?

A) II & 5 முதல் 11 வரை B) II & 5 முதல் 9 வரை
C) III & 4 முதல் 12 வரை D) III & 8 முதல் 12 வரை

**129)** 73வது சட்டத்திருத்தம் பற்றிய கூற்றுகளை ஆராய்க:

1. ஒன்றிய பஞ்சாயத்து என்பது ஒரு இடைநிலை பஞ்சாயத்து ஆகும். இதன் எல்லையையும் ஆளுநர் தன் அறிக்கையின் மூலம் தீர்மானிக்கிறார்.

2. இந்த சட்டத்திருத்தம், மாநில அரசுக்கு பஞ்சாயத்துகளை அமைப்பதிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களை அமைப்பதிலும் முழு சுதந்திரத்தை வழங்குகிறது.

A) 1 மட்டும் சரி B) 2 மட்டும் சரி C) 1 & 2 தவறு D) 1 & 2 சரி

**130)** பேரூராட்சியின் துணைத்தலைவர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

A) நேரடியாக மக்களால்
B) மறைமுகமாக பேரூராட்சி உறுப்பினரால்
C) நியமனத்தின் மூலம்
D) ஏதேனும் ஒன்று

**131)** இந்திய அரசியலமைப்பில் அடிப்படைக் கடமைகள் (11) சேர்க்கப்பட்ட ஆண்டு மட்டும் சட்டத்திருத்தம் என்ன?

A) 1978, 44 வது B) 1972, 40 வது C) 1976, 42 வது D) 1978, 42 வது

**132)** முகப்புரை கூறும் நோக்கங்களின் சரியான வரிசை எது?

A) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், நீதி
B) நீதி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
C) சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம், நீதி
D) நீதி, சுதந்திரம், சகோதரத்துவம், சமத்துவம்

**133)** இந்தியாவின் முதல் பட்டியலின உச்சநீதிமன்ற நீதிபதி யார்?

A) எல். இளையபெருமாள் B) கே.ஜி. பாலகிருஷ்ணன்
C) எஸ்.ஆர். பாஸ்கரன் D) ஏ.எல். குமரகுருபன்

**134)** _____ முதல் ______ வரை இந்தியாவில் பிறந்த குழந்தைகளின் பெற்றோர் எந்த நாட்டவராக இருப்பினும் அவர்கள் பிறப்பால் குடியுரிமை பெறுகின்றனர்.

A) 1955 டிசமபர் 31 முதல் 1988 ஜனவரி வரை B) 1951 ஜூலை 30 முதல் 1985 அக்டோபர் முதல்
C) 1947 ஆகஸ்ட் 15 முதல் 1986 செப்டம்பர் வரை D) 1950 ஜனவரி 26 முதல் 1987 ஜூலை வரை

**135)** ஈரவைகளின் கூட்டுக் கூட்டத்திற்கு தலைமை தாங்குபவர் யார்?

A) பிரதமர் B) மக்களவை சபாநாயகர்
C) மாநிலங்களவை தலைவர் D) குடியரசுத்தலைவர்

**136)** தற்போது சொத்துரிமையானது அரசியலமைப்பின் எப்பகுதியில் மற்றும் எப்பிரிவின் கீழ் ஒரு சட்ட உரிமையாக வைக்கப்பட்டுள்ளது?

A) பகுதி X, பிரிவு 285 A
B) பகுதி XII, பிரிவு 300 A
C) பகுதி XI, பிரிவு 291 A
D) பகுதி VIII, பிரிவு 148 A

**137)** மாநில அமைச்சர்கள், தனித்தனியாகவும் கூட்டாகவும் யாருக்குப் பொறுப்பானவர்கள் ஆவர்?

A) ஆளுநருக்கு
B) முதலமைச்சருக்கு
C) சட்டமன்றத்திற்கு
D) சபாநாயகருக்கு

**138)** வரைவுக்குழுவின் தலைவராக டாக்டர். பி.ஆர். அம்பேத்கார் நியமனம் செய்யப்பட்ட நாள் எது?

A) 1947, டிசம்பர் 29
B) 1948, ஜனவரி 29
C) 1946, டிசம்பர் 29
D) 1947, ஆகஸ்ட் 29

**139)** மாநிலப் பொதுப் பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை பதவிநீக்கம் செய்யும் அதிகாரம் பெற்றவர் யார்?

A) குடியரசுத்தலைவர்
B) ஆளுநர்
C) முதலமைச்சர்
D) பிரதமர்

**140)** இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் தேர்தலில் வாக்குசெலுத்துபவர்களில் சேராதவர்கள் யார்?

A) மக்களவை உறுப்பினர்கள்
B) மாநிலங்களவை உறுப்பினர்கள்
C) மாநில சட்டமன்ற உறுப்பினர்கள்
D) எவருமில்லை

**141)** மக்களே அதிகாரத்தின் தோற்றுவாய் என்று கூறுவது?

A) பகுதி 3
B) முகப்புரை
C) பகுதி 3 (அ)
D) பகுதி 3 (ஆ)

**142)** டாக்டர் அம்பேத்கர் எச்சட்டப்பிரிவை இந்திய அரசியலமைப்பின் 'இதயம் மற்றும் ஆத்மா' எனக் குறிப்பிடுகிறார்?

A) பிரிவு 32
B) பிரிவு 33
C) பிரிவு 34
D) பிரிவு 35

**143)** இந்திய அரசியலமைப்பின் 'புதுமையான சிறப்பம்சம்' என டாக்டர் அம்பேத்கர் குறிப்பிடுவது?

A) அடிப்படை உரிமைகள்
B) அடிப்படைக் கடமைகள்
C) முகவுரை
D) அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்

**144)** சர்வதேச பெண் குழந்தை ஆண்டு எது?

A) 1990
B) 1995
C) 2000
D) 2005

**145)** விரிவு படுத்தப்பட்ட கூட்டாட்சி அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள் உருவாக வழிவகுத்த சட்டம் எது?

A) இந்திய அரசாங்கச் சட்டம் 1919
B) இந்திய அரசாங்கச் சட்டம் 1935
C) இந்திய அரசுச் சட்டம் 1947
D) ஏதுமில்லை

ETW ACADEMY

**146)** அடிப்படை உரிமைகளை மாற்றியமைப்பது தொடர்பான சட்டத்திருத்தத்தினை பின்வரும் எம்முறையின்படி மேற்கொள்ளமுடியும்?

A) நாடாளுமன்றத்தில் தனிப்பெரும்பான்மை மூலமாக

B) நாடாளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மை மூலமாக

C) நாடாளுமன்றத்தில் சிறப்பு பெரும்பான்மை மற்றும் சரி பாதி மாநிலச் சட்டமன்றங்களால் ஏற்புறுதி செய்யப்படுவது மூலமாக

D) ஏதுமில்லை

**147)** சட்டப்பேரவை உருவாக்கம் பற்றிக்குறிப்பிடும் அரசமைப்பின் உறுப்பு எது?

A) 174 B) 173 C) 171 D) 170

**148)** மாநில சட்ட மேலவையின் மொத்த உறுப்பினர்களில் எத்தனை பங்கு உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல் மூலமாக தேந்தெடுக்கப்படுகின்றனர்?

A) 6 இல் 5 பங்கு B) 6 இல் 1 பங்கு C) 3இல் 1 பங்கு D) 5இல் 4 பங்கு

**149)** ஆளுநருக்கான சிறப்புரிமைகளின்படி, தவறான வாக்கியம் எது?

A) தனது பணிகள் மற்றும் அதிகாரத்தைச்செய்ய வேண்டும் என எண்ணுவதிலும் செயல்படுத்துவதிலும் எந்த நீதிமன்றத்திற்கும் ஆளுநர் பதில் அளிக்க வேண்டிய அவசியமில்லை.

B) ஆளுநரின் பதவிக்காலத்தில் அவர் மீது குற்றவியல் நடவடிக்கைகளை அவருக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் தொடர முடியாது.

C) ஆளுநரின் பதவி காலத்தில் அவர் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தவோ அல்லது அவரை கைது செய்யவோ எந்த நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்க முடியாது.

D) மாநில ஆளுநருக்கு எதிராக எவ்வித வழக்குகளையும் தொடர முடியாது.

**150)** சுதந்திர இந்தியாவில் முதல் மொழிவழி மாநிலமாக உருவாக்கப்பட்ட மாநிலம் எது?

A) கர்நாடகா B) தமிழ்நாடு C) ஆந்திரப்பிரதேசம் D) மகாராஷ்டிரம்

**Reminder on Week 12 - Test Schedule**

~~1. ஞாயிறு அன்று காலை 6 மணிக்கு தமிழ் கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்~~ ➔ **COMPLETED**

~~2. ஞாயிறு மாலை 6 மணிக்கு தமிழ் Answer Key வெளியாகும்.~~ ➔ **COMPLETED**

~~3. ஞாயிறு மாலை 6.30 க்கு Indian Polity கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்~~ ➔ **COMPLETED**

4. திங்கள் காலை 6 மணிக்கு Polity Answer Key வெளியாகும்

5. திங்கள் காலை 6.30 மணிக்கு இந்திய வரலாறு - Indian History கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்.

6. திங்கள் மாலை 6.30க்கு History Answer Key வெளியாகும்.

7. தனித்தனியான மதிப்பெண் பட்டியல் வெளியிடப்படும்.

***

© ETW Academy



ETW ACADEMY